1970 மார்ச் 24]

(இ) எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

(உ) பள்ளிக் கட்டடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 27—7—1966.

(இ) ரூபாய் 9,000.

(உ) விரைவில் கட்டி முடிக்கப்படும்.

திரு. எஸ். சிவசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, இந்தத் தேதி நிர்ணயம் செய்யப்பட்டும் கூட இவ்வளவு கால தாமதத்திற்கு என்ன காரணம்? இந்த யூனியன் கட்டிடம் அரிசனத் தெருவைத் தொட்டுக்கொண்டிருக்கிறது என்று ஆட்சேபித்தார்களா? அல்லது, அந்தப் பள்ளிக்கூட கட்டிடம் அரிசனத் தெருவைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று ஆட்சேபித்தார்களா? அந்த ஆட்சேபனைகளின் காரணமாகத்தான் இந்த வேலை நடைபெற வில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் ஏனுஇல் காலதாமதம் ஏற்பட்டது என்று கேட்டுவிட்டு அவர்களே விளக்கமும் சொன்னார்கள். அரிசனத் தெருவை தொட்டுக் கொண்டிருக்கிறது என்பதாக ஆட்சேபனை எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது பள்ளிக்கூடம் நடந்துகொண்டிருக்கிற இடத்திலேயே கட்டப்படவேண்டும் என்பதாக தொகுதி உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் மூலமாக குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பம் கொடுத்தார்கள். அதுபற்றி ஒன்றியத்தின் மூலமாக மாங்குடி பஞ்சாயத்து கருத்து கேட்கப்பட்டது. இதுவரை பதில் வரவில்லை. வந்தவுடன் ஊராட்சி ஒன்றியத்தையும் கலந்துகொண்டு முடிவு எடுக்கலாம். அந்த வகையில மாண்புமிகு உறுப்பினரும் ஒத்துழைக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்வி.

அதிக வினாக்களுக்கு விடையளிக்காமல் இருப்பது குறித்து

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் 1,600-க்கும் அதிகமாகக் கேள்விகள் கொடுத்திருக் கிறேன். அதுபற்றி அறையில் கேட்கச் சொன்னார்கள். கேட்டு விட்டேன். அவையில் கேட்கச் சொன்னார்கள் கேட்டுவிட்டேன். 225 கேள்விகளுக்கே பதில் சொல்லப்பட்டிருக்கின்றன. வருடம் 3 ஆகியும் பாக்கிக் கேள்விகள் என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் , இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. கோதண்டராமன் அவர்கள் ஏற்கனவே இந்த முறை யீட்டை ஒரு முறை இந்த அவையிலேயே எடுத்துச் சொல்லி,

நான் அதற்கான விளக்கத்தை இந்த அவையிலேயே கொடுத்திருக்கிறேன். அறையில் கூட இல்லை. அவையிலும் கேட்டேன், அறையிலும் கேட்டேன், ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்வது உண்மையான குற்றச்சாட்டாகாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் நான் கேள்வி கொடுத்து எத்தனையோ வருடங்கள் ஆகியும் அவற்றுக்குப் பதில் இன்னமும் கூறப்படவில்லை என்றால் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன் அவர்கள் உட்காரவேண்டும். இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. அதைப்பற்றிக் கேட்க இது இடமும் இல்லை. "உங்களுடைய இலாக்காவில் இருந்து வினாக்களுக்கு விடை வரவேண்டியிருக்கிறது. விடைகளை அருள்கூர்ந்து சீக்கிரம் அனுப்புங்கள்" என்று நான் அமைச்சர்களுக்கு எல்லாம் கடிதம் எழுதியிருக்கிறேன் என்று இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறேன். கோதண்டராமன் ஒருவருக்குத்தான் கேள்வி போட உரிமை இருக்கிறது என்றல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் கேள்வி போட உரிமை இருக்கிறது. கடந்த காலத்தில் அதிகமாகக் கேள்வி போட்டவர் திரு. கோதண்டராமன் என்கிற நிலை இப்போது இல்லையே என்கிற வருத்தம் அவருக்கு இருக்கலாம். அதற்காக அதை பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவது சரியல்ல. அது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன். நானே கேள்வி போட வேண்டும் என்கிற நிலை இல்லை. நான் கொடுத்திருக்கிற கேள்விகளுக்கே பதில் 3 ஆண்டுகள் ஆகியும் வரவில்லை என்று சொன்னால் வேண்டுமென்றே நான் கொடுத்திருக்கிற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கோதண்டராமன் அவர்கள் உட்காரவேண்டும். நான் ஏற்கனவே தெளிவாக காரண காரியங்களை இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். இலாக்காக்களில் இருந்து பதில்கள் வந்து நான் இந்தப் பேரவைக்குக் கொண்டுவரவில்லை என்றால் என்மீது குற்றம் சாட்டலாம். விடை வந்து நான் வைக்காமல் இல்லை. இன்னும் எனக்குள்ள சங்கடமான நிலை என்னவென்றால் தேடித் தேடிப் பார்த்து ஒரு நாளைக்கு 20 கேள்விகள் வைக்கவேண்டுமே என்று விடைகளைச் சேர்த்து எடுக்க வேண்டியிருக்கிறது. திரு. கோதண்டராமன் அவர்கள் பேசியதை இங்கே வீற்றிருக்கிற அமைச்சர்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டிருப்பதால் அவரவர்களுடைய இலாக்காக்களில் இருந்து விடைகளை சீக்கிரமே அனுப்பிவைக்க இது துணைபுரியும் என்பதால் நான் திரு. கோதண்டராமனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப்பிரச்னை கொண்டுவருவார்கள்.